**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்**
**முன்னிலை:திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ், பி.ஏ., எல்.எல்.எம்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்**
**2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 02 ஆம் நாள் திங்கள்கிழமை**
**இ.ம.எண்.06/2019**
**அ.வ.எண்.49/2010**

1. செங்கோட கவுண்டர்
2. ராமசாமி (இறந்துவிட்டார்)
3. ராமாயி ...மனுதாரர்கள்/வாதிகள்

/எதிராக/

1. ராமசாமி
2. கே.ஆர்.மணி
3. சின்னப்பகவுண்டர் (இறந்துவிட்டார்)
4. ராமசாமி (இறந்துவிட்டார்)
5. புண்ணியமூர்த்தி
6. தேவராஜன்
7. பழனியம்மாள்
8. ராஜாத்திமணி ...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

9. வீரம்மாள்
10. ரதி
11. தனம் (எ) தனலட்சுமி ... எதிர்மனுதாரர்கள்/உத்தேச தரப்பினர்கள்

இம்மனு கடந்த 27.11.2019 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.M.C.பெரியசாமி அவர்கள் ஆஜராகியும், 1, மற்றும் 3 முதல் 7 வரையிலான எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் அசல் வழக்கிலேயே தோன்றாதரப்பினர்களாக்கப்பட்டும், 2 மற்றும் 8ம் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.L.கணபதி சுப்ரமணியன் அவர்கள் ஆஜராகியும், 9 முதல் 11ம் எதிர்மனுதாரர்கள்/ உத்தேசதரப்பினர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.L.ஸ்டாலின் ராஜா அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

<u>உத்தரவு</u>

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 22 விதி 4 பிரிவு 151 ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுவாகும்.

1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம் : -

வழக்கின் 4 ம் எதிர்மனுதாரர்/4 ம்பிரதிவாதியான ராமசாமி கடந்த 12.03.2019 ம் தேதியில் இறந்துவிட்டதாக 2 மற்றும் 8 பிரதிவாதிகள் தரப்பில் 19.08.2019 ம் தேதியன்று குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டது. அதன்பின்பு 4 ம்எதிர்மனுதாரர்/4 ம்பிரதிவாதி தரப்பில் ஆஜராகியிருந்த வழக்கறிஞரும் 4 ம்எதிர்மனுதாரர்/4 ம்பிரதிவாதியின் இறப்பு பற்றிய சங்கதியை தெரிவிக்காமல் அவரது வக்காலத்தினை வாபஸ் பெற்றுக்கொண்டார். அதன்பின் 4 ம்எதிர்மனுதாரர்/4 ம்பிரதிவாதி இவ்வழக்கில் தோன்றாதரப்பினராகிவிட்டார். இவ்வழக்கில் ஏற்கனவே 4 ம்பிரதிவாதியின் மகன் புண்ணியமூர்த்தி 5 ம்எதிர்மனுதாரர்/5 ம்பிரதிவாதியாக உள்ளார். மேற்படி வாதிகள் இறந்து போன 4 ம்எதிர்மனுதாரர்/4 ம்பிரதிவாதியின் இறப்பு மற்றும் அவரின் சட்டபூர்வமான வாரிசுகள் விவரம் பற்றி 19.08.2019 மற்றும் 27.08.2019 ம் தேதிகளில் 2,8 பிரதிவாதிகளின் குறிப்பாணைகளின் பேரிலேயே தெரிந்து கொண்டார்கள். இறந்துபோன 4 ம்எதிர்மனுதாரர்/4 ம்பிரதிவாதியின் சட்டப்படியான வாரிசுகளில் ஒருவரான புண்ணியமூர்த்தி என்பவர் இவ்வழக்கில் ஏற்கனவே 5 ம்எதிர்மனுதாரர்/5 ம்பிரதிவாதியாக உள்ளதால், இம்மனுவின் உத்தேச தரப்பினர்களை இவ்வழக்கில் 9 முதல் 11 பிரதிவாதிகளாக சேர்க்க கோரி மனுதாரர்கள்/வாதிகள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள்.

2) 2 ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு 8 ம் எதிர்மனுதாரரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:

மனுதாரரின் மனு பொய். சட்டப்படிக்கும், சங்கதிகளின் படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. 4 ம்எதிர்மனுதாரர்/4 ம்பிரதிவாதி கடந்த 6 மாதம் முன்பு இறந்து விட்டார். விளம்புகை பரிகாரம் கேட்டுள்ள வாதிகள் எதிர்மனுதாரர்களின் நிலத்தை அபகரிக்கும் எண்ணத்தில் அவர் இறப்பை அறிவித்து நடவடிக்கை எடுக்காமல் ஆணையாளர் நியமனம், அவசர கதியில் விசாரணை போன்றவைகளை செய்துவந்து, குறுக்கு விசாரணை சமயத்தில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் கடந்த 8 வருடங்களுக்கு முன்பு 3 ம்எதிர்மனுதாரர் இறந்த சங்கதியும் மனுதாரர்களுக்கு நன்கு தெரியும். மனுதாரர்களின் இம்மனு காலதாமதம் மற்றும் அபேட்மெண்டால் பாதிக்கப்படுவதால் இந்த வாரிசு மனு சட்டப்படி செல்லத்தக்கதல்ல. எனவே மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென 2 மற்றும் 8 ம் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் கூறியுள்ளார்கள்.

3) 10 ம் எதிர்மனுதாரர்/உத்தேசதரப்பினரால் தாக்கல் செய்யப்பட்டு 9 மற்றும் 11 ம் எதிர்மனுதாரர்கள்/உத்தேசதரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:

மனுதாரரின் மனு பொய். சட்டப்படிக்கும், சங்கதிகளின் படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. 4 ம்பிரதிவாதி ராமசாமி என்பவர் 12.03.2019 ம் தேதி இறந்தவிவரம் மனுதாரர்கள் நன்கு தெரியும். ஆனால் 4 ம்பிரதிவாதி இறந்தது 2 மற்றும் 8 ம் பிரதிவாதிகள் தரப்பில் 19.08.2019 ம் தேதியன்று நீதிமன்றத்தில் குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்ட போதுதான் மனுதாரர்களுக்கு தெரியும் என்று பொய்யுரைத்துரைத்துள்ளார்கள். மேற்படி அசல் வழக்கில் 3,4 ம்பிரதிவாதிகள் இறந்த விவரங்களை நன்கு தெரிந்துகொண்டே அவர்களின் வாரிசுகளை தரப்பினர்களாக சேர்த்தால் மேற்படி வழக்கானது வலுவிழந்து போய்விடும் என்ற காரணத்தினால் அவர்களை வழக்கில் தரப்பினர்களாக சேர்க்காமல் மறைத்து அசல் வழக்கினை நடத்தி வந்தது சட்டத்திற்கு புறம்பான செயலாகும். மேலும் இறந்துபோன 3,4 பிரதிவாதிகளின் இறப்பு விவரங்களை நன்கு தெரிந்துகொண்டு தற்போது இறந்தவர்களின் வாரிசுகளை உத்தேச தரப்பினர்களாக சேர்க்க உரிய நேரத்தில் மனுதாக்கல் செய்யாமல் போனதற்காக வேண்டி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார். எனவே மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென 9 முதல் 11 வரையுள்ள எதிர்மனுதாரர்கள்/உத்தேசதரப்பினர்கள் கூறியுள்ளார்கள்.

4) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாய்மொழிச் சாட்சியங்களோ, சான்றாவணங்களோ முன்னிலைப்படுத்தவில்லை.

5) பிரச்சினை :-

இம்மனு அனுமதிக்கத்தக்கதா என்பதே ஆகும்.

6) பிரச்சினைக்கான தீர்வு

(i) மனுதாரர்கள் தரப்பில் வழக்கின் 4 ம் எதிர்மனுதாரர்/4 ம்பிரதிவாதியான ராமசாமி கடந்த 12.03.2019 ம் தேதியில் இறந்துவிட்டதாக 2 மற்றும் 8 பிரதிவாதிகள் தரப்பில் 19.08.2019 ம் தேதியன்று குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டது எனவும், அதன்பின்பு 4 மஎதிர்மனுதாரர்/4 ம்பிரதிவாதி தரப்பில் ஆஜராகியிருந்த வழக்கறிஞரும் 4 மஎதிர்மனுதாரர்/4 ம்பிரதிவாதியின் இறப்பு பற்றிய சங்கதியை தெரிவிக்காமல் அவரது வக்காலத்தினை வாபஸ் பெற்றுக்கொண்டார் எனவும், அதன்பின் 4 மஎதிர்மனுதாரர்/4 ம்பிரதிவாதி இவ்வழக்கில் தோன்றாதரப்பினராகிவிட்டார் எனவும், இவ்வழக்கில் ஏற்கனவே 4 ம்பிரதிவாதியின் மகன் புண்ணியமூர்த்தி

5 ம்எதிர்மனுதாரர்/5 ம்பிரதிவாதியாக உள்ளார் எனவும், மேற்படி வாதிகள் இறந்து போன 4 ம்எதிர்மனுதாரர்/4 ம்பிரதிவாதியின் இறப்பு மற்றும் அவரின் சட்டபூர்வமான வாரிசுகள் விவரம் பற்றி 19.08.2019 மற்றும் 27.08.2019 ம் தேதிகளில் 2,8 பிரதிவாதிகளின் குறிப்பாணைகளின் பேரிலேயே தெரிந்து கொண்டார்கள் எனவும், இறந்துபோன 4 ம்எதிர்மனுதாரர்/4 ம்பிரதிவாதியின் சட்டப்படியான வாரிசுகளில் ஒருவரான புண்ணியமூர்த்தி என்பவர் இவ்வழக்கில் ஏற்கனவே 5 ம்எதிர்மனுதாரர்/5 ம்பிரதிவாதியாக உள்ளதால், இம்மனுவின் உத்தேச தரப்பினர்களை இவ்வழக்கில் 9 முதல் 11 பிரதிவாதிகளாக சேர்க்க கோரி மனுதாரர்கள்/வாதிகள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளது தெரிய வருகிறது.

(ii) 2 மற்றும் 8 ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் 4 ம்எதிர்மனுதாரர்/4 ம்பிரதிவாதி கடந்த 6 மாதம் முன்பு இறந்து விட்டார் எனவும், விளம்புகை பரிகாரம் கேட்டுள்ள வாதிகள் எதிர்மனுதாரர்களின் நிலத்தை அபகரிக்கும் எண்ணத்தில் அவர் இறப்பை அறிவித்து நடவடிக்கை எடுக்காமல் ஆணையாளர் நியமனம், அவசர கதியில் விசாரணை போன்றவைகளை செய்துவந்து, குறுக்கு விசாரணை சமயத்தில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது எனவும், மேலும் கடந்த 8 வருடங்களுக்கு முன்பு 3 ம்எதிர்மனுதாரர் இறந்த சங்கதியும் மனுதாரர்களுக்கு நன்கு தெரியும். மனுதாரர்களின் இம்மனு காலதாமதம் மற்றும் அபேட்மெண்டால் பாதிக்கப்படுவதால் இந்த வாரிசு மனு சட்டப்படி செல்லத்தக்கதல்ல எனவும், எனவே மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென 2 மற்றும் 8 ம் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் கூறியுள்ளார்கள்.

(iii) 9 முதல் 11 வரையுள்ள எதிர்மனுதாரர்கள்/உத்தேசதரப்பினர்கள் தரப்பில் 4 ம்பிரதிவாதி ராமசாமி என்பவர் 12.03.2019 ம் தேதி இறந்தவிவரம் மனுதாரர்கள் நன்கு தெரியும் எனவும், ஆனால் 4 ம்பிரதிவாதி இறந்தது 2 மற்றும் 8 ம் பிரதிவாதிகள் தரப்பில் 19.08.2019 ம் தேதியன்று நீதிமன்றத்தில் குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்ட போதுதான் மனுதாரர்களுக்கு தெரியும் என்று பொய்யுரைத்துரைத்துள்ளார்கள் எனவும், மேற்படி அசல் வழக்கில் 3,4 ம்பிரதிவாதிகள் இறந்த விவரங்களை நன்கு தெரிந்துகொண்டே அவர்களின் வாரிசுகளை தரப்பினர்களாக சேர்த்தால் மேற்படி வழக்கானது வலுவிழந்து போய்விடும் என்ற காரணத்தினால் அவர்களை வழக்கில் தரப்பினர்களாக சேர்க்காமல் மறைத்து அசல் வழக்கினை நடத்தி வந்தது சட்டத்திற்கு புறம்பான செயலாகும் எனவும், மேலும் இறந்துபோன 3,4 பிரதிவாதிகளின் இறப்பு விவரங்களை நன்கு தெரிந்துகொண்டு தற்போது இறந்தவர்களின் வாரிசுகளை உத்தேச தரப்பினர்களாக சேர்க்க உரிய நேரத்தில்

மனுதாக்கல் செய்யாமல் போனதற்காக வேண்டி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார் எனவும், எனவே மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென 9 முதல் 11 வரையுள்ள எதிர்மனுதாரர்கள்/உத்தேசதரப்பினர்கள் கட்சி செய்துள்ளது தெரியவருகிறது.

(iv) வழக்கு ஆவணங்களை கவனமாக பரிசீலனை செய்ததில் 4 ம்பிரதிவாதி 12.03.2019 ல் உத்தேச தரப்பினர்களையும், 5 ம்பிரதிவாதியையும் வாரிசாக விட்டு இறந்துவிட்டார் என்பதை இருதரப்பிலும் ஒப்புக் கொண்டுள்ளது தெரியவருகிறது. இவ்வழக்கானது உரிமை விளம்பல் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும் கோரி தாக்கல் செய்துள்ளதால் உத்தேச தரப்பினர்களை இவ்வழக்கில் சேர்க்க உத்தரவிடுவது நீதிக்கு உகந்தது என்பதால் இம்மனு அனுமதிக்கத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. ஆனால் 4 ம்பிரதிவாதியின் வாரிசுகளை சேர்க்க உடனடியாக மனுதாக்கல் செய்யாமல் காலதாமதமாக மனுதாக்கல் செய்துள்ளதால் ஆனால் இம்மனுவை மனுதாரர்கள் காலதாமதமாக தாக்கல் செய்துள்ளதால் 2,8 எதிர்மனுதாரர்களுக்கு ஏற்பட்ட காலவிரையத்தை ஈடுசெய்யும் வகையில் மனுதாரர்கள் 2,8 எதிர்மனுதாரர்களுக்கு தலா ரூ.500/-செலவுத்தொகையாக செலுத்தும் பட்சத்தில் இம்மனுவினை அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக மனுதாரர்கள் 2,8 எதிர்மனுதாரர்களுக்கு தலா ரூ.500/-யை 09.12.2019 க்குள் செலுத்தும் பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என உத்தரவிடப்படுகிறது. அழைக்க 10.12.2019.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 02 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

**ஒப்பம்/-திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**மேட்டூர்.**

மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் சான்றாவணங்கள்:- இல்லை

**ஒப்பம்/-திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**மேட்டூர்.**